Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 25 | 08-06-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 110

உங்களுக்கு உதவுவோம் வாருங்கள்
அச்சகங்கள் அலுவலகங்களுக்கு
மாணவர்களுக்கு
சாணக்கியா
அச்சுப் பொருட்கள்
காகிதாதிகள் வாணிபம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# பேச்சுவார்த்தைகளுக்கு தற்பொழுது தேவை

# இடைக்கால நிர்வாகம் குறித்த தீர்க்கமான திட்ட வரைபு

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

**பேச்சுவார்த்தைகளுக்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க கூறியவெறும் கருத்துக்கள் அடிப்படையாக இருக்கமுடியாது. இடைக்கால நிர்வாகம் குறித்து நாம் நீண்டநாட்களுக்குமுன்பே விவாதித்து விட்டோம். இப் பொழுது என்ன தேவையென்றால் தீர்க்கமான உறுதியான விவரங் களுடனான திட்டவரைபுகள் ஆகும் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.**

இடைக்கால நிர்வாகம் அமைக்க சிறிலங்கா அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி தொடர்பாகத் தமிழ் இணையத்தளம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தெளிவான, தீர்க்கமான பரிந்துரைகளின் அடிப்படையிலேயே பேச்சு வார்த்தைகளைப் பயனுள்ள ரீதியில் நடத்த முடியும். புதிய மீள் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே எதிர்காலப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வவு.வில் கண்ணிவெடியகற்ற இந்திய இராணுவம் வருகை

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இந்திய இராணுவக் குழுவொன்று வவுனியா வந்துள்ளது. இவர்கள் தமது பணிகளை இன்னும் ஒரு சில தினங்களில் ஆரம்பிக்கவுள்ளனர். மன்னார் வீதியில் சாளம்பன் குளத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் முதலில் இவர்கள் ஈடுபடவுள்ளனர். (28)

# டோக்கியோ மாநாட்டின் பின் புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச்சு

### - டோக்கியோவில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

டோக்கியோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் பின்னர் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகளிடன் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் கடிதம் மூலம் தீர்த்துக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு ஜப்பான் சென்றுள்ள அமைச்சர் பீரிஸ் டோக்கியோவில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்குக் கிழக்குப் புனரமைப்புக் கென கிடைக்கின்ற நிதி விடுதலைப் புலிகளின் முழுப் பங்களிப்புடன் பயன்படும் எனவும் இம்மாநாட்டில் தாம் எதிர்பார்த்த முழு நிதி உதவியும் தமக்குக் கிடைக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். உத்தியோக பூர்வமற்ற முறையில் நேற்றும் நேற்று முன்தினமும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடனும் மற்றும் நாடுகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்பட்ட போது இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியா கலந்து கொள்ளும்

ஜப்பானில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளவுள்ளது.

இம்மாநாட்டில் இந்திய அரசாங்கத்தின் சார்பாக ஜப்பானில் உள்ள இந்தியத் தூதுவர் கலந்து கொள்வார் என கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகள் கலந்து கொள்ளாததால் தாம் கலந்து கொள்வதாக இந்தியா அறிவித்துள்ளது.

### -வைத்திருந்த கைக்குண்டு வெடித்தது-

# மட்டு. ஆரையம்பதியில் ஈ.பி.டி.பி.உறுப்பினரும், மகளும் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் ஈ.பி.டி.பி.உறுப்பினர் ஒருவருடைய கைக்குண்டு வெடித்து குறிப்பிட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரும் அவரது ஒன்றரை வயது மகளும் பலியானதுடன் மேலும் ஒரு எட்டுவயதுச் சிறுமி காயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு ஆரையம்பதி வேம்பையடி வீதியில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

வேலுச்சாமி சாமுவேல் (வயது 30) என்பவரே பலியானவராவார்.

பலியானவர் ஆரையம்பதியில் உள்ள வரதர் அணியுடன் சேர்ந்து இயங்கிய வினோத் என்பவர் எனவும் இவர் யாழ்ப்பாணத்தில் மூன்று வருடங்கள் ஈ.பி.டி.பி இபக்கத்துடன் இணைந்து செயற்பட்டவர்கள் என

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஏ-9 புனரமைப்பு பணிகள் திருப்திகரமாக அமையவில்லை

### ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு

ஏ-9 வீதி புனரமைப்புப் பணிகள் எதிர்பார்த்தளவு திருப்திகரமாக அமையவில்லை என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக மாங்குளத்தில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் இக்கருத்தை வெளியிட்டனர்.

இப்புனரமைப்புப் பணிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கியுள்ளது. ஆயினும் இப்பணி

(08ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர் திருமலையில் சுட்டுக்கொலை

(திருமலை)

திருகோணமலையில் முன்னாள் ஈ.பி.டி.பி.உறுப்பினர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். திருஞான சம்பந்தர் வீதியிலுள்ள தனியார் விடுதிஒன்றின் பராமரிப்பாளராக இருந்து வந்த இராமசாமி விஜயநாதன் என்பவரே இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (25)

# பதவி விலகுமாறு ஜே.வி.பி. ரணிலிடம் வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் தனது பதவியை இராஜிநாமாச் செய்ய வேண்டும் என ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு கடிதம் ஒன்றை ஜே.வி.பி. யின் தலைமைச் செயலாளர் டில்வின் சில்வா நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டநாள் முதல் சிறிலங்காவின் அரசியலமைப்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

# பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஜே.வி.பி.யினர் கொழும்பில் சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

இடைக்கால நிர்வாக சபைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் ஜே.வி.பி. நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளது. இந்நிகழ்வில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஜே.வி.பி. தொண்டர்களும் கலந்து கொண்டுள்ளனர். ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் சமாதானத்திற்கு எதிரான பதாகைகளை ஏந்தியிருந்தனர். கோட்டை புகையிரத நிலையத் திற்கு முன்னால் ஆரம்பித்த ஊர்வலம் லிப்ரன் சதுக்கத்தையடைந்ததும் அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.


இதன்போது பெருமளவு விசேட அதிரடிப்படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் கண்ணீர்புகைக்குண்டுகள், பொல்லுகள் சகிதம் பிரதம மந்திரியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் முன் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.



# மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் 3500 கண்ணிவெடிகள் தகர்த்தழிப்பு!

மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் நேற்று முன்தினம் சுமார் 3500 நிலக் கண்ணி வெடிகள் அழிக்கப்பட்டுள்ளன. இயக்கச்சிப் பகுதியில் வைத்து இவை தகர்த்தழிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்



தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் 150 பேருடன் மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அது தற்போது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினதும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் உதவியுடன் 500 அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பாக விரிவாக்கப் பட்டுள்ளது. இதன் செயற்பாடுகள் பாரிய பொறுப்பானதாகவும் அமைகின்றது. குப்பைவாரிகள் போன்ற கருவியினால் கைகளினால் செய்யப்படும் இச்சேவையை மனித நேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவு அறிமுகம் செய்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. அது மட்டுமன்றி சர்வதேச கண்ணி வெடியகற்றும் நிறுவனங்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இதனை சர்வதேச தரத்திற்கு கொண்டு வந்துள்ள எமது ஊழியர்களின் செயற்பாடுகளுக்கு மிகுந்த மதிப்பளித்து நன்றி தெரிவிக்கின்றோம்.

வெடிபொருட்களிலிருந்து மக்களைக் காக்க அமைக்கப்பட்டுள்ள இப்பிரிவு பல்வகையான நடவடிக்கைகளை அமுல் செய்து இன்னும் சில வருடங்களில் வெடிபொருட்களற்ற சூழலை தமிழர் தாயகத்தில் உருவாக்கும் இலட்சியத்தை அடைய பாடுபடுகின்றது. 1999ஆம் ஆண்டு வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டோர் 182 ஆக இருந்த அதேநேரம் 2003ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டோர் தொகை 05 மட்டுமே. எமது பணியின் பிரதான விளைவு இதுவே. ஆகவே வெடிபொருட்களினாலும், கண்ணிவெடியாலும் பாதிக்கப்படுவோர் 12.5 வீதமாகக் குறைந்துள்ளது. 2003 ஏப்ரல் வரை 3,81,88,950 சதுர மீற்றர்கள் நிலப்பரப்பு சுத்தமாக்கப்பட்டு சுமார் 98,476 நிலக் கண்ணைவெடிகளும், 80,993 ஏனைய வெடிபொருட்களும் மனித நேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவு வருங்காலங்களில் மாதாந்தம் அதன் செயற்பாடுகளைத் தொடரவுள்ளது. என்.பி.ஏ.யின் தொழில்நுட்ப உதவியினாலும், நிதி உதவியாலும் 3500 நிலக்கண்ணி வெடிகள் அழிக்கப்பட்டுள்ளன. 3500 வெடிகளை அகற்றியதன் மூலம் அதே தொகையான குடும்பங்களையும், கால்களையும் நாம் பாதுகாத்துள்ளோம். அந்தப் பகுதிகளில் 5261 குடும்பங்கள் மீள் குடியேறியிருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றோம். சர்வதேச தரத்திற்கு உயர்வடைய தோளோடு தோள் நின்று உதவியளித்த என். பி.ஏ. யிற்கு நாம் மிக்க நன்றியுடையோம். எமது இம்மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவை விரிவாக்கவும், மனித வளத்தை 600 வரை அதிகரிக்கவும் யாழ். குடா நாட்டிற்கும் ஏனைய பிரதேசத்திற்கும் எமது சேவையை விஸ்தரிக்கவும் திட்டமிட்டுள்ளோம். என்.பி.ஏ.யின் ஆதரவுடன் புதிதாக இப்பிரிவில் பெண் அங்கத்தவர்களையும் இணைத்துள்ளோம். அவர்கள் நிறைவான அணியாக உருவெடுப்பார்கள் என நாம் நம்புகின்றோம். அமைதியான தமிழீழத் தாயகம் ஒன்று உருவாக மக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், ஏனைய திணைக்களங்களும் எமக்கு கைகொடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

–வவு. ஆதார வைத்தியசாலை வைத்தியர்களால் –

# கிளிநொச்சி, முல்லையில் வைத்திய சேவைகள்

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா ஆதார வைத்திய சாலை வைத்தியர்களால் கிளி நொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட் டங்களில் விசேட வைத்திய சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 14ம், 15ம் திகதிகளில் இச் சிகிச்சைகள் இடம்பெறவுள்ளன. 14ம் திகதி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலும், 15ம் திகதி கிளிநொச்சி கட்டம் -01 வைத் தியசாலையிலும் மருத்துவ நிபுணர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய மேற்படி குழுவினரால் வைத்திய சிகிச்சை நடத்தப்பட வுள்ளது.

எனவே பல்வேறுபட்ட நோய் களாலும் பாதிக்கப்பட்டுள்ளவர் களும் மற்றும் வைத்திய ஆலோ சனைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மேற்படி வைத் திய சேவையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (லோ)



ஜீவனோபாய ஆதாரக் கடனுதவித் திட்ட விளம்பரப் பலகையினை உலக வங்கிப் பிரதிநிதி திரைநீக்கம் செய்து வைத்துள்ளார்.

# வட்டக்கச்சியில் வீடொன்றிலிருந்து தங்க நகைகள் திருட்டு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து தங்கநகைகள் களவு போயுள்ளன.

கடந்த 02-ஆம் திகதி அப்பகுதியிலுள்ள சிறிரங்கநாதன் ரோகினி என்பவரின் வீட்டிலேயே நகைகள் களவு போயுள்ளன.

உடுப்புப்பெட்டிக்குள் இந்த நகைகள் இருந்ததாகவும் வீட்டுச் சொந்தக்காரர்கள் உறக்கத்தில் இருந்த வேளை உடுப்புப்பெட்டியைத் தூக்கிச் சென்ற திருடர்கள் அதிலிருந்த நகைகளை எடுத்துக் கொண்டு மிகுதியை 500மீற்றர் தூரத்திலுள்ள வாய்க்கால் ஓரத்தில் வீசிவிட்டுச் சென்றதாகவும் தெரிய வந்துள்ளது. (12)

# பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் எமது கல்விக்கு தீங்கையே இழைக்கின்றன

### மாணவர் எழுச்சிநாளில் கிளி. வலயக்கல்விப்பணிப்பாளர்

(அலுவலக செய்தியாளா)

1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களம் கொண்டுவரப்பட்டு வன்செயல்கள் ஆரம்பித்தகாலம் தொட்டு எங்களுடைய பிரதேசத்தினுடைய கல்விக்கு, பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் ஒவ்வொரு விதமாக தீங்கை இழைத்து வருகின்றன. இவ்வாறு கிளிநொச்சியில் இடம் பெற்ற தமிழீழ மாணவர்எழுச்சி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப. அரியரட்ணம் அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தின் மாணவர்கள் கல்வி உலகிலே பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

உங்களுக்கான தரமான கல்வியை நாம் அளிக்கின்றோமா?

உங்களுக்கான சரியான வசதிகளை நாம் அளிக்கின்றோமா? அரசிடம் இருந்து கிடைக்க வேண்டிய உதவிகள் எமக்குக் கிடைக்கின்றதா? என்பதை இன்றையநாளிலே சில நிமிடங்கள் நாம் சிந்தித்துப் பார்ப்பது மிக அவசியம்.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டு இந்த நாட்டிலே வன்செயல்கள் ஆரம்பித்தகாலம் தொட்டு எங்களுடைய பிரதேசத்தினுடைய கல்விக்கு பதவியிலே வந்த ஒவ்வொரு அரசாங்கமும் ஒவ்வொரு விதமான தீங்குகளை இழைத்து வந்தன.

இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்ட அந்த தீங்கின் முழுத்தாக்கங்களை, கல்விகற்கவேண்டும் என்ற விருப்பில் உள்ள நீங்கள் எந்த வழிகளில் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

ஒரு காலத்தில் தரப்படுத்தல் மூலம் எமது மாணவர்கள் கல்வியில் பாதிக்க வைக்கப்பட்டார்கள். அதன்பின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசங்கள் என எமது கல்விக்குப் பல தடைகள் போடப்பட்டன.

இன்று சமாதானம் என்ற போர்வையின் கீழ் எமது கல்வியில் பல்வேறுபட்ட துன்பநிலையைத் தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றோம்.

எமது மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமான கல்வியைப் போதிப்பதானால் பொருத்தமான ஆசிரியர்கள் தேவை. ஆனால் எமது பகுதிகளில் போதியளவு ஆசிரியர்கள் இல்லை.

எமது மாணவர்கள் கட்டட வசதிகள் இல்லாதும் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் எதுவும் இன்றியும் போசாக்கின்றியும் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது கல்வியைத் தொடர்கின்றனர். கணினிகள் தரப்படவில்லை. புதிய பாடத்திட்டம் என்ற போர்வையில் எமது வரலாறுகள் சிதைக்கப்பட்டுவரு கிறது. பாடப்புத்தகங்கள் முழுமை யாகக் கிடைக்கவில்லை. இத்தனை அடக்கு முறைகளையும் உடைத்து நாம் தொடர்ந்தும் கல்வியைக்கற்கவேண்டும் என்றார். (லோ)

# கண்டெடுப்பு

ஏ-09 நெடுஞ்சாலையில் கடந்த வியாழனன்று பெண்களுக்கான பெறுமதியான உடுப்புக்கள் அடங் கிய பயணப் பொதியொன்று கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி காவல் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பயணப்பொதியைத் தவற விட்டவர்கள் கிளிநொச்சி காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# மீண்டும் சொந்த இடத்தில்

கௌதாரி முனை அ.த.க. பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

வலம்புரி இராணுவ நடவடிக்கையின் பின் பள்ளிக் குடாவில் இயங்கி வந்த இப்பாடசாலை மீண்டும் கடந்த மாதம் முதல் கௌதாரி முனையில் இயங்கி வருகிறது.

பள்ளிக்குடாவில் இப்பாடசாலை இயங்கிய இடத்தில் சுண்ணாவில் அ.த.க. பாடசாலை இயங்கிவருகிறது.


## கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் [கச்சேரி] ஆங்கில சுருக்கெழுத்தாளர்

## பதவிக்கான வெற்றிடம்

சுருக்கெழுத்தாளர் சேவைக்குறிப்பின்படி ஆங்கில சுருக்கெழுத்தாளருக்கு உரிய தகைமைகளை உடையவர்கள் வேறு இடத்திலிருந்து இங்கு இடமாற்றம் பெற்றோ அல்லது மீளச் சேவையிலோ கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடமையாற்ற விரும்புவர்களும், எதுவித வேலையிலும் இல்லாத ஆங்கில சுருக்கெழுத் தாளருக்குரிய தகைமையும், கணினி அறிவுமுடையவர்களும் விண்ணப்பிப்பதுடன் 25.06.2003க்கிடையில் நேரில் அலுவலக நாளில் சுயவிபரத்துடன் சமுகமளிக்கவும். அடிப்படைத் தகுதி இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8150)



## இரணைப்பாலை சென் அன்ரனீஸ் வி.க. மின் ஒளியில் நடாத்தும் மாபெரும் விளையாட்டு விழா – 2003

மேற்படி கழகம் வருடாந்தம் நடாத்தி வரும் லெப்ரினன், செந்தூரன் ஞாபகார்த்த விளையாட்டு நிகழ்விற்கான விண்ணப்பங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் பதிவாகிய கழகங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

*போட்டி விபரம் :*

01. உதைபந்தாட்டம் - 11பேர் (இரு அணிகள் பங்கு பற்றலாம்) கட்டணம் - 500 ரூபா.
02. து.வண்டி ஓட்டம் (50 மைல் - 18,44 பல்வீல்) கட்டணம் 300 ரூபா.
03. மரதன் ஓட்டம் 10 மைல் கட்டணம் 150 ரூபா.
04. கயிறு இழுவை (07 பேர் கொண்டது) கட்டணம் 300 ரூபா.
05. மைதான நிகழ்வுகள் (இருபாலருக்கானவை) 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டங்கள் கட்டணம் 50 ரூபா.
06. 4x400 மீற்றர் அஞ்சல் கட்டணம் 100 ரூபா.

*குறிப்பு :*

சகலரும் கழகங்களின் ஊடாகவே கலந்து கொள்ளவும். புள்ளிகள் வழங்கப்பட்டு முதல் நிலைக் கழகங்கள் கௌரவிக்கப்படும். கட்டணம் அற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி - 20.06.2003 பகல் 12 மணி.

*பதிவு செய்யப்படும் இடம் :*
வன்னி (கரிஸ்) ஒளி, ஒலிக் கலையகம்,
பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு.

*தகவல் :*
சென் அன்ரனீஸ் வி.க.
இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு

(சி-3228)


## ஈராக் மீது போரைத் தொடுப்பதற்காக

# பென்டகனின் இரகசிய அறிக்கையை புஷ்சின் நிர்வாகம் திரித்துக் கூறியது

## ~புதிய உளவு அறிக்கை தெரிவிப்பு

**ஈராக் இரசாயன ஆயுதங்களைக் குவித்து வைத்துள்ளது என்பதற்கு நம்பகமான சான்றுகள் போதிய அளவு இல்லை என்று பென்டகன் அமைப்பின் இரகசிய அறிக்கை ஒன்று தெரிவித்த போதிலும் புஷ் நிர்வாகம் ஈராக்கிற்கு எதிராக யுத்தத்தைத் தொடுத்தது என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**வெள்ளை மாளிகையும் பென்டகன் அமைப்பும் ஈராக் மீதான யுத்தத்தை நியாயப்படுத்துவதற்கு ஈராக்கின் ஆயுத உற்பத்தித் திட்டம் தொடர்பான இரகசிய அறிக்கைகளை திரித்துக்கூறின என்று தற்போது வெளியாகிய உளவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.**



ஈராக் சனாதிபதி சதாம்ஹுசைன கடந்த ஏப்ரல் மாதம் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்ட பின்னர் பேரழிவைத் தரும் ஆயுதங்கள் எதுவும் அந்த நாட்டில் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சர்வதேச அணு சக்தி அமைப்பினர் ஈராககிற்குச சென்றுள்ளனர். இது தொடர்பான தகவலை அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஈராக்கில் ஆயுதப் பரிசோதனையில் ஈடுபட்ட இந்த அமைப்பு தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடனேயே ஈராக்கிற்குள் சென்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதனைக்குழுவிற்கு ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கா பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈராக்கின் ஆயுதங்கள் தொடர்பான அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின ஆயுதப் பரிசோதனைக்குழுத் தலைவர் கான்ஸ் பிலிக்ஸ் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் முன்வைத்துள்ளார்.

இந்த அறிக்கையில் அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.



ஈராக்கிற்குச் சென்றுள்ள ஏழு சர்வதேச அணுசக்தி முகவர்களில் ஒருவர், அமெரிக்க இராணுவத்தினரின் பாதுகாப்புடன் பாக்தாத்திலுள்ள விடுதியொன்றுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்.

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள்; விரைவில் அறிக்கை வெயிடப்படும்!

## அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் தொடர்பான அறிக்கைகள் விரைவில் வெளியிடப்படும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

கட்டாரில் அமெரிக்கப் படைகளிடையே உரையாற்றுகின்ற போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஏற்கனவே இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கப்படும் இரண்டு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் ஆயுதங்களைக் கண்டுபிடிக்க 1400 வல்லுனர்கள் அந்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் ஈராக்கின் ஆயுத விபரங்கள் குறித்து ஐ.நா.சபையில் அறிக்கை சமர்ப்பிக்க ஹான்ஸ் பிலிக்ஸ், இந்த வார இறுதியில் ஓய்வு பெறவும் உள்ளார்.

## அணுவாயுத உடன்படிக்கைப்படி ஈரான் நடந்துகொள்ளவில்லை

### ஐ.நா. கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

ஈரான் அதன் அணுவாயுதப் பாதுகாப்பு உடன்படிக்கையின் படி நடந்துகொள்ளவில்லை என்று அணுவாயுத கண்காணிப்புக்குழு ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் ஆளுனர்கள் சபைக் கூட்டம் ஒன்றின் முன்னதாக இந்த நிறுவனம் எடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்தக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஈரான் இந்த நிலைமைக்குப் பரிகாரம் காண நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இந்த அறிக்கை கூறுகின்றது.

## - பாக்தாத்திற்குத் தெற்கே -

# அமெ.கடற்படைப் பொறியியலாளர் வெடி பொருள் வெடித்துப் பலி

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்குத் தெற்கே அமெரிக்க கடற்படையினர் வெடிபொருட்களைக் கையாண்டபோது அவை வெடித்ததினால் கடற்படையைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனரென்று அமெரிக்க மத்திய கட்டளைப் பணியகம் தெரிவித்துள்ளது. ஈராக் மீதான யுததம் நிறைவடைந்த பின்னர் ஈராக்கில் அமெரிக்கத் துருப்பினர் விபத்துக்கள் காரணமாக உயிரிழப்பது அதிகரித்து வருகின்றது என்று இராணுவத் தலைமையகமான பென்டகன் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பஞ்சாப் ஜலஸ்கா நகரில் இரு பிரிவினரிடையே கலவரம்

### - ஒருவர் பலி; மூவர் படுகாயம்!

பஞ்சாப் மாநிலம் ஜலஸ்கா நகரில் நேற்று முன்தினம் கோவில் ஒன்றில் வழிபாடு நடத்துவது தொடர்பாக இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியுள்ளது.

இதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 03 பேர் காயமடைந்துள்ளனர்.

வன்முறை கும்பல் பலபேருந்துகளையும் லொறிகளையும் தீவைத்துக் கொழுத்தியுள்ளது.

தற்போது அங்கு கலவரம் ஓய்ந்துவிட்டது. என்றாலும் முன்னெச்சரிக்கையாக ஊரடங்குச் சட்டம் அமுல்ப் படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஆறுமணி முதல் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவின் போது அத்தியாவசிய பொருட்களை வாங்கமட்டுமே பொதுமக்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று காவல்துறை தெரிவித்துள்ளது.

இதேபோல் ஆந்திரா தலைநகர் ஹைதராபாத்தில் கடந்த வியாழன் ஏற்பட்ட மதக்கலவரம் தொடர்பாக 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு பிரிவினரிடையே ஏற்பட்ட கலவரத்தில் ஏராளமான கடைகள் நொருக்கப்பட்டதுடன், வாகனங்களுக்கும் தீ வைக்கப்பட்டது.

கலவரப்பகுதியைப் பார்வையிட்ட ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இச்சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

# பிறேசில், இந்தியா, தென்னாபிரிக்கா 3 நாடுகள் கூட்டமைப்பு உருவாக்கம்

பிறேசில், இந்தியா, தென்னாபிரிக்காஆகியனமூன்று நாடுகள் கூட்டமைப்பு ஒன்றை நேற்று முன்தினம் உருவாக்கியுள்ளன.

நாடுகளுக்கிடையிலான வர்த்தக அபிவிருத்தி, அரசியல் நடவடிக்கைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு, அபிவிருத்தி யடைந்த நாடுகளுடனான பேச்சு வார்த்தைகளின் போது ஒரே அணியாகச் செயற்படல் என்பன இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சின் ஹா கருத்து வெளியிடுகையில் அபிவிருத்தி அடைந்த 08நாடுகள் உச்சிமாநாடு போன்ற நிகழ்வுகளின் போது ஒரே குரலில் 03 நாடுகளும் கோரிக்கை விடுப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று கூறியுள்ளார். பிறேசிலின் புதிய சனாதிபதி லூனாடிசில்வா கருத்துக் கூறுகையில் 03 நாடுகள் கூட்டணியுடன் சீனாவும் ரஷ்யாவும் இணைந்து கொள்ளும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



குஜராத் கலொல் மாவட்டத்திலுள்ள விலங்குகள் பாதுகாப்பு மையத்தினருகே வெப்பத்தில் மாண்டு சிதறிக்கிடக்கும் விலங்குகளின் எச்சங்கள்

## நிலத்தடி நீரைப் பாதுகாக்க கூடுதல் முயற்சிகள் தேவை

### ஐ. நா. சபை வலியுறுத்து

குடிநீராகப் பயன்படுத்தப்படும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பொருட்டு உலகெங்கிலும் கூடுதலான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஐநா சபை தெரிவித்துள்ளது.

நிலத்தடி நீர் தொடர்ந்து அளவு குறைந்து வருகின்றது என அது எச்சரிக்கை செய்துள்ளது.

உலக சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில் உலகில் கிட்டத்தட்ட இருநூறு கோடிபேர் நிலத்தடி நீரை நம்பி வாழ்கின்றனர். அதில் பெரும்பாலானவர்கள் வளர்ந்து வரும் நாடுகளின் மக்களாகும். அந்த இடங்களில் ஆண்டொன்றுக்கு குறைந்தது மூன்று மீற்றர் என நிலத்தடி நீர் அளவு குறைந்து வருகிறது.

இந்தப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் தேசிய அரசாங்கங்கள் நாட்டின் அனைத்து நீர் ஆதாரங்களையும் ஒருங்கிணைப்புடன் நல்ல முறையில் நிர்வகிக்க வேண்டியது அவசியமாகும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி

**சென்றவாரத் தொடர்ச்சி....**

1951இல் புதுடில்லியில் ஆசிய விளையாட்டு விழா ஆரம்பித்து வைக்கப்பட்ட போது இலங்கை முதன்முறையாகக் கலந்துகொள்ளும் போட்டிகளில் பதக்கங்கள் பெறுவது என்ற அதன் பெருமையைத் தக்க வைத்துக்கொண்டது. இலங்கை வீரர் எம்.ஏ.அக்பர் தடியூன்றிப்பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார். அதுமுதல் இலங்கை தங்கப்பதக்கங்களை 1958இல் டோக்கியோவிலும் 1970இல் பாங்கொக்கிலும் 1977இல் தெஹ்ரானிலும் நடந்த ஆசிய விளையாட்டு விழாக்களிலும் பெற்றது. 1958இல் டோக்கியோ ஆசிய விளையாட்டு விழாவில் என்.எதிர்வீரசிங்கம் உயரம் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றார். 1970இல் பாங்கொக் ஆசியவிளையாட்டுவிழாவில் எஸ்.பீ.றோஸா 5000 மீற்றர், 1000 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் இரு தங்கப்பதக்கங்களைப் பெற்றார். அத்துடன் 400 மீற்றர் ஓட்டத்தில் டபிள்யூ. விமலதாஸ தங்கப்பதக்கத்தையும் 4X400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஆசிய சாதனையுடன் டபிள்யூ.விமலதாஸ, சுனில் குணவர்தன, கோசல சஹபத்து, ஏ.பிரேமச்சந்திர ஆகியோர் தங்கப்பதக்கங்களையும் 1974இல் தெஹ்ரான் ஆசிய விளையாட்டு விழாவில் பெற்றனர்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினராக விளங்குகின்றது.

எந்தப்பிரதான நோக்கத்திற்காக இலங்கை தேசிய ஒலிம்பிக் சபையும் அதன் முன்னோடி சங்கங்களும் அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டமை இவற்றின் மூலம் தெளிவாகின்றது. ஒலிம்பிக் இயக்கம் ஒரு உலக அமைப்பாக ஏற்றுக்கொள்ளப் பட்டமையினால் தேசிய ஒலிம்பிக் கமிட்டியும் அதன் பணிகளையும் நோக்கங்களையும் விரிவுபடுத்தியுள்ளதுடன் பன்முகப்படுத்தியும் உள்ளது. இத்தகைய பன்முகப்படுத்தலின் காரணமாக தேசிய மட்டத்தில் ஒலிம்பிக் அமைப்பின் செய்தியைப் பரப்புவதற்கான பல்வேறு நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் பொறுப்பேற்றுள்ளது.

தேசிய ஒலிம்பிக்கமிட்டி அதன் கடமைகளை நிறைவேற்றும் வகையில் பயிற்சியாளர்களின் தரத்தை உயர்த்துவதன் மூலம் விளையாட்டு வீரர்களின் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் ஒலிம்பிக் கூட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி உதவியைக் கொண்டு ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டுள்ள விளையாட்டுக்கள் தொடர்பான பயிற்சியாளருக்கு மேலும் பயிற்சியளிக்க நிபுணர்களையும் விசேட பயிற்சியாளர்களையும் பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1984ஆம் ஆண்டு முதல் இத்தகைய 45 விசேட பயிற்சியாளர்களின் சேவைகள் 18 வெவ்வேறு விளையாட்டுக்களில் பயிற்சிமுறை தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்டன. 1200க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர். இதேபோன்றதொரு நிகழ்ச்சித்திட்டம் ஒலிம்பிக் கூட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியுடன் ஹங்கேரி பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவில் தீவிர பயிற்சி நெறியைப் பயில்வதற்கான புலமைப்பரிசிலைப் பெற்றுத் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மெய்வல்லுனர் துறை, நீச்சல், கரபந்தாட்டம், டென்னிஸ்,எடைதூக்குதல் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த 15க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் கடந்த 5 வருடங்களில் இந்தக் கல்வி நிறுவனத்தில் பயிற்றப்பட்டுள்ளனர். திறமையுள்ள இளம் விளையாட்டு வீரர்களும் வெளிநாட்டுப் பயிற்சிபெற்று



தமதுதரத்தை உயர்த்திக்கொள்ளும் வகையில் அவர்களிற்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய ஒலிம்பிக்கமிட்டி விளையாட்டு அமைப்புக்களின் நிர்வாக உத்தியோகத்தர்களின் தரத்தை உயர்த்துவதிலும் கவனம் செலுத்தியுள்ளது. இலங்கையில் விளையாட்டு நிர்வாகத்தின் சகல துறைகள் மற்றும் ஒலிம்பிக்கின் அடிப்படைக்கொள்கைகள் பற்றி பல்வேறு மட்டங்களிலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு விளையாட்டுத் தலைமைத்துவப் பயிற்சிநெறிகள் பல நடந்தப்பட்டுள்ளன.

பொதுமக்களின் கவனத்தை தேசிய ஒலிம்பிக் கமிட்டியின்பால் செலுத்துவதற்காகவும் இவர்களுக்கு ஒலிம்பிக் கொள்கைகள் தொடர்பாக புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காகவும் கடந்த 13 ஆண்டுகளாக ஒலிம்பிக் தின ஓட்டமொன்று ஆண்டு தோறும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நடத்தப்பட்ட இந்த ஓட்டநிகழ்ச்சிகளில் பொது மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது ஈடுபாட்டைக் காட்டினர்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் ஒலிம்பிக் கொடியையும் ஒலிம்பிக் சின்னத்தையும் இலங்கையில் பாவிக்கும் தனித்தன்மையான உரிமையையும் பெற்றுள்ளது.

ஒலிம்பிக் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும் விளையாட்டுக்கள் தொடர்பான அமைப்புக்கள் மாத்திரமே தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் அங்கத்துவத்தைப் பெறலாம் என்பதால் தற்போது 19 தேசிய சங்கங்கள் மட்டுமே தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளன. ஆனால் அண்மையில் இந்த விதியில் விலக்களிக்கப்பட்டு ஆசிய விளையாட்டு பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழா, தெற்காசிய விளையாட்டுவிழா நிகழ்ச்சி நிரல்களில் சேர்க்கப்பட்டுள்ள விளையாட்டுக்களைச் சேர்ந்த சங்கங்களுக்கும் அங்கத்துவராகும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கடந்த பல வருடங்களாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் போரின் தாக்கத்தால் பயனடைந்தவர் இல்லையென்றே கூறலாம்.

**சு.கனகராசா**
*கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர்*

# சவால்களுக்குப் பதில் கூறப்போகும் மேற்கிந்திய–சிறிலங்காப் போட்டிகள்

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டித் தொடர்களில் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுக்குப் பயணமாகியுள்ளது.



ஒரு நாள் தொடரின் முதல் போட்டி 7ம் திகதியும், இரண்டாவது போட்டி இன்றும், மூன்றாவது ஒரு நாள் போட்டி வரும் 11 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி 20 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

உலகக் கிண்ணப் போட்டியைத் தொடர்ந்து இரு ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொண்ட சிறிலங்கா அணி. இறுதிப் போட்டி வாய்ப்பைக்கூடப் பெறாது தோல்வி அடைந்த நிலையில் மேற்கிந்தியத் தீவுக்கான விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

அதேவேளை, தனது சொந்த மண்ணில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர்களை அவுஸ்திரேலிய அணியிடம் இழந்த மேற்கிந்தியத் தீவு ஏழு ஒரு நாள் போட்டியில் கடைசி மூன்று போட்டிகளிலும் ஹட்ரிக் வெற்றி பெற்று அவுஸ்திரேலிய அணியை அதிர்ச்சித் தோல்விக்கு உட்படுத்தியதுடன் அதன் சாதனைப் பயணத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இது சிறிலங்கா மண்ணில் 2001 ஆம் ஆண்டு தமக்கு ஏற்பட்ட தோல்விக்கு இம்முறை பதிலடி கொடுக்கும் உத்வேகத்தை அவ் அணிக்கு ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தோல்விகளைச் சந்தித்து மோசமான நிலையில் உள்ள சிறிலங்கா அணி மேற்கிந்திய அணியை வென்று தமது பழைய நிலைக்குத் திரும்பிச் செல்லுமா என்பதே சிறிலங்கா ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.



சொந்த மண்ணிலேயே இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாது போன சிறிலங்கா அணியால் வேற்று நாட்டில் வெல்வது என்பது தற்போதைய நிலையில் முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இது வெற்றிபெற முடியாத அணி எனக் கருதப்பட்ட அவுஸ்திரேலிய அணியை மேற்கிந்தியத் தீவு தோற்கடித்ததன் மூலம் மேலும் அக்கருத்தை உறுதியாக்கியுள்ளது.

இந்நிலையில் மேற்கிந்தியத்தீவு அணித்தலைவர் லாரா கருத்துத் தெரிவிக்கும் போது;

அவுஸ்திரேலிய அணிக்கெதிராக ஒரு நாள் தொடரை இழந்த பிறகும் தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் எமது அணி வெற்றி பெற்றுள்ளது.

அந்தப் பெருமையைத் தக்க வைத்துக் கொள்ளவே நாங்கள் போராடுவோம். அவுஸ்.அணியுடன் ஒப்பிடு கையில் சிறிலங்கா அணி ஒன்றும் அவ்வளவு பலம் வாய்ந்த அணியில்லை தற்போது அந்த அணி பலவீனமான அணியாகவே காட்சியளிக்கிறது. ஜெயசூரியா,முத்தையா முரளிதரன் மற்றும் சமிந்தவாஸ் போன்ற திறமை வாய்ந்த வீரர்கள் போட்டியின் போக்கைத் தங்களுக்கு சாதகமாகத் திருப்புவார்கள் என எதிர்பார்க்கலாம். இந்த மூவரைத் தவிர மற்ற வீரர்கள் எல்லோரும் இதுவரை சராசரியாகத்தான் ஆடி வருகின்றனர். ஒரு நாள் தொடரை எமது அணி இலகுவாகக் கைப்பற்றும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

கடைசியாக எமது அணி 2001 ஆம் ஆண்டு சிறிலங்காவில் விளையாடிய போது டெஸ்ட் தொடரை இழந்தது. அதற்குப்பதிலடி கொடுக்கும் உத்வேகத்துடன் இருப்பதாகக் கூறினார்.

ஒரு நாள் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை முன்கூட்டியே கூறிவிட முடியாது. மேற்கிந்தியத்தீவு அணி சிறிலங்கா வந்தபோது மிக மோசமாக விளையாடினார்கள். அவர்கள் இந்தியா சென்றபோது மிகச் சிறப்பாக விளையாடினார்கள். ஆகவே யார் எப்போது வெற்றி அடைவார்கள் தோல்வி அடைவார்கள் என்று கூற முடியாது எனத் தெரிவித்த சிறிலங்கா அணித் தலைவர் அத்தபத்து மேற்கிந்திய அணியை வென்று தமது அணியை பழைய நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும் எனத் தெரிவித்தார்.

## விளையாட்டு அரங்கு

**ஜெயந்திரன்**

# பிரான்ஸ் அணியின் புதிய தலைவராக ஜிடேன்

பிரான்ஸ் காற்பந்து அணியின் நட்சத்திர வீரரான ஜிடேன் தலைமைப் பதவியில் அசத்தலாக செயற்பட்டு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

எதிரணியினரைத் திணறடித்து கோல் அடிப்பதில் வல்லவரான இவர் மெல்டா அணிக்கு எதிராகத் தனது தலைமைத்துவத் திறனையும்நன்கு வெளிப்படுத்தியுள்ளார். 2004 இல் நடைபெறவுள்ள ஐரோப்பியக் கிண்ணத்துக்கான தகுதி காண் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் பிரான்ஸ் அணியின் தலைவர் மார்ஷல் டி செய்லியின் மோசமான ஆட்டம் காரணமாக இருந்ததைத் தொடர்ந்து மெல்டா அணிக்கு எதிரான போட்டியில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.



இதனைத் தொடர்ந்து தற்காலிக தலைவர் பதவி ஜிடேனுக்குக் கிடைத்தது.

தலைவர் பதவியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அற்புதமாகச் செயற்பட்ட ஜிடேன் 1998 இல் உலகக் கிண்ணப் போட்டியின் இறுதிப் போட்டியை நினைவுபடுத்தினார்.

இதைப் போன்றே மெல்டா அணிக்கு எதிராக இம்முறை இரண்டு கோல்கள் அடித்த இவர் 6-0 என்ற கோல்க் கணக்கில் பிரான்ஸ் பிரமாண்ட வெற்றிபெற காரணமாயிருந்தார். இந்நிலையில், தலைமை அனுபவம் குறித்து ஜிடேன் கூறும் போது மெல்டாவுக்கு எதிராக 2 கோல்கள் அடித்தன் மூலம் தலைமை சுமை எனது இயல்பான ஆட்டத்தைப் பாதிக்கவில்லை என்பதை உணர்த்தியுள்ளேன் என்றார்.

அணியின் தலைவராகத் தொடர்ந்து இருப்பதே எனது விருப்பம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 2002ஆம் ஆண்டு தென்கொரியாவிலும் ஜப்பானிலும் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் செனகல் அணியுடனான போட்டியில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது பிரான்ஸ். அதில் ஜிடேன் காயம் காரணமாகக் கலந்துகொள்ளாததுடன் தொடர்ந்து நடைபெற்ற அடுத்தடுத்த போட்டியிலும் அவர் கலந்து கொள்ள முடியவில்லை. இந்நிலையில் பிரான்ஸ் அணி முதல் சுற்றிலேயே வெளியேறியது.

இதற்கு வீரர்கள் திறமையாக ஆடாதது மற்றும் தலைமைத் துவம் என்பவற்றில் குறை கூறப்பட்டது. இந்நிலையில் புதிய தலைவராக ஜிடேன் தெரிவு செய்யப்பட்டமை பிரான்ஸ் அணியை வலுப்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2000 ஆம் ஆண்டின் உலகின் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட ஜிடேன் தற்போது பிரேசிலின் ரொனால்டோ, ஜேர்மனியின் ஒலிவர்கான் ஆகியோருக்கு அடுத்த நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பொலித்தீன் பாவனையால் சூழல் மாசடைகிறது

# எச்சரிக்கின்றார் கிளி. அரச அதிபர்

**வீதி, கால்வாய், பொலித்தீன்பாவனை, செயற்கை உரப்பாவனை சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடனான செவ்வி.**

**கிளிநொச்சி நகரின் வடிகால் அமைப்பும், சூழலும் பற்றிக் கூற முடியுமா?**

எமது பிரதேசம் ஒரு சமதரையாக உள்ளது. அத்தோடு கிளிநொச்சி நகரக் குளம் இச்சுற்றாடலுடைய மேம்பாட்டுக் குரிய குளமாக இருப்பதனாலும் வடிகாலமைப்பை நல்லமுறையில் அமைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே முன்னைய காலகட்டங்களில் கிளிநொச்சிக் கழிவு வாய்க்கால்கள் கிளிநொச்சிக் குளத்திலேயே போய்ச் சேர்ந்தன. அதற்காக நாங்கள் முதலாவது நடவடிக்கையாக இந்த நகரத்தை கிளிநொச்சிக் குளத்திற்கு அப்பால் நகர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

நகரத்திட்டம் என்ற அடிப்படையில் நாங்கள் எடுத்த நடவடிக்கையில் எல்லைப் பயன்பாடுடைய காணிகளை கொண்ட அம்பாள் புரம் முறிகண்டியை நோக்கி நாங்கள் நகர்த்தியிருக்கின்றோம். புகையிரத நிலையம் கூட அப்பகுதிகளில் அமைப்பதற்காக நாங்கள் முடிவெடுத்தது ஏனென்றால் கிளிநொச்சிக் குளத்தை அண்டிய சுற்றாடலை நாம்



ஒரு பொழுதுபோக்கு வலயமாகவும் மாற்றுவதற்கே. வடிகால் அமைப்பை பொறுத்தவரையில் வடிகால் அமைப்பு சபையிடம் கிளிநொச்சி மாவட்டத்தினை நில அளவீடு செய்து வடிகால் அமைப்பை ஒரு புதிய முறையில் செய்து தருமாறு கேட்டுள்ளோம்.

இந்த வடிகாலமைப்பை உருத்திரபுரம் மற்றும் ஜெயந்திநகர் நோக்கியும் கிளிநொச்சிக் குளத்திற்கு அப்பாலும் நகர்த்துவதென்றும் இந்தக் கழிவு அகற்றும் வாய்க்கால்களை நீளமாக அமைப்பதனால் நீர் தேங்கும் வாய்ப்பு உள்ளது, அதற்காக இடையிடையே நிலக்கீழ் தாங்கிகள் அமைத்து, அந்தத் தொட்டிகளில் நீரைத் தேங்கவிட்டு கிருமிகளை அழிக்கக்கூடிய வகையில் மருந்துகள் பாவிப்பது என்றும் ஆலோசித்துள்ளோம். இங்கு வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் மூலம் வருகின்ற நீர்க்கழிவுகளை அகற்றலாம். அத்தோடு திண்மக்கழிவுகளை இவ்வாறு அகற்ற முடியாது. அவற்றை உரியமுறையில் தொட்டிகளில் தேங்கவைத்து உரியமுறையில் அழிப்பது என்று தீர்மானம் எடுத்துள்ளோம்.

நாங்கள் இந்த அடிப்படையில்தான் வடிகாலமைப்புச்சபையிடம் இத்திட்டத்தைக் கோரியுள்ளோம். இதற்கு இடையூறானது என்னவென்றால் பெருந்தெருவானது கொழும்புக்கும், கண்டிக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையேயான ஒரு தெருவாக இருப்பதனால் இதனுடைய அகலம் 132 அடியாகவும் மத்தியிலிருந்து 66 அடியாகவும் இது பிரகடனப்படுத்தப் பட்டிருந்தது. அதன்படிதான் அரசாங்கம் காணிகளையும் வழங்கியுள்ளது. ஆனால் இங்கு கட்டடங்கள் எல்லாம் வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் அமைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக வியாபாரிகள் அத்துமீறிக் கட்டடங்களை கட்டியுள்ளனர்.

50 அடி பாதையாகவும் மிகுதி 16அடி வடிகாலமைப்பிற்கும் மரங்கள் வளர்ப்பதற்கும் தேவை. அதாவது வீதியினுடைய வெப்பத்தைத் தணிப்பதற்கு மீள் மரநடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் சூழல் பாதுகாப்பை மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு உதவ முடியும்.

கிளிநொச்சியில் உள்ள பழைய வடிகாலை மூடிவிட்டு அதன் மேல் புதிய கட்டடங்களைக் கட்டியுள்ளனர். அவ்வடிகால் மூடப்பட்டமையால் கழிவுநீர் ஆங்காங்கே தேங்குகின்றன. இப்பகுதியின் இருமருங்கிலும் உள்ள கடைகளின் கீழ் வடிகால் உள்ளது. குறிப்பாக டிப்போச் சந்தியில் வடிகால் மூடப்பட்டுள்ளமையால் அப்பகுதியில் கழிவுநீர் தேங்குகின்றது.

**கிளி.மாவட்டத்தில் பெரும்பாலான நிலப்பரப்புக்கள் உவரடைகின்றது. இது பற்றி ஏதாவது கூறமுடியுமா?**

கிளிமாவட்டத்தில் உவர் நிலமாகக் காணப்படுகின்றமைக்குக் குஞ்சுப்பரந்தனில் இருந்து பூநகரி வரையான பகுதிகளுக்குக் கடல்கிட்ட உள்ளது முக்கிய காரணமாகும். கடந்தகாலங்களில் இப்பகுதியில் உப்பு வயல் செய்தமையால் இப்பகுதிகளில் இயற்கையாகவே உப்புக் கட்டப்பட்டது. காலம் செல்லச்செல்ல நிலம் மேடாக மாறியதனால் ஏற்று நீர்ப்பாசனம் மூலம் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

அடுத்தது சுண்ணாம்புப் பாறைகள் உள்ள பிரதேசங்களில் பாறைகளின் இடைவெளிகளினூடாக உவர் நீர் கசிவதனாலும் நிலம் உவரடைகின்றது. அடுத்தது ஆற்றுநீர் எல்லாம் இப்பகுதியினால் தடுப்பேதுமின்றிப் பாய்வதனால் பயன் தரு மூலகங்கள் எல்லாம் அரித்துச் செல்லப்படுகின்றது.

இதைக் கட்டுப்படுத்த செய்யக் கூடியமுறை என்னவென்றால் கடல் அணைகளை குஞ்சுப்பரந்தனில் இருந்து பூநகரி வரையும் கட்டி இங்கிருந்து வெள்ளம் போகும் போது திறக்கக்கூடிய கதவுகளைவைத்து கடல்நீர் உட்செல்ல விடாதவாறு அமைக்கவேண்டும்.

**வீதிப் போக்குவரத்தின் சூழல் பிரச்சினை பற்றிச் சொல்ல முடியுமா?**

இங்குள்ள வீதிகள் பெரும் பாலானவை ஆரம்பத்தில் தார் போடப்பட்ட வீதிகளாகவே இருந்தது. தற்போது ஏற்பட்ட போர் நடவடிக்கை காரணமாக 20 ஆண்டு காலமாக பராமரிப்பிற்கு போதிய நிதியின்மை காரணமாக புழுதியாகவுள்ளது. முன்பு தார் போடப்பட்ட வீதிகள் கிரவல் போட்டு கிரவல் வீதிகளாக மாற்றப் பட்டுள்ளன. தற்போது நிதி கிடைக்கும் என்றால் அவற்றை செப்பனிடமுடியும். அரசாங்கத்தின் மதிப்பின்படி ஒரு கிலோமீற்றர் வீதியைப் புனரமைக்க 10 மில்லியன் ரூபா தேவை. சாதாரணமாக எமது மாவட்டத்தில் 127 கிலோ மீற்றர் வீதியுள்ளது. இவ்வாறு பிரதான வீதிகள் யாவும் உடனடியாகத் திருத்த வேண்டியுள்ளது. புழுதி நிறைந்த வீதிகளால் சுவாசம் தொடர்பான நோய்கள் பரவுகின்றன. இவ்வீதிகளைப் புனரமைப்பதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதோடு மக்களையும் நோயில் இருந்து தக்க வைக்க முடியும்.

தற்போது கிளி. நகரை அண்டிய பகுதிகளில் ஒரு கிலோ மீற்றர் அளவிற்கு, எல்லா வீதிகளுக்கும் தார் போடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பொலித்தீன் பாவனையினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றி கூற முடியுமா?**

1970ஆம் ஆண்டில் இருந்தே இப்பிரச்சினை இருந்து வருகின்றது. எமது பிரதேசம் விவசாயப் பிரதேசமாக இருப்பதனால் இது முக்கியமாக தடைசெய்யப்படவேண்டும். இப்பொலித்தீன்கள் நீண்டகாலங்கள் போனாலும் உக்காது. இவற்றை வயல் நிலங்களிலும், ஏனைய பிரதேசங்களிலும் இடுவதனால் நீரைத் தரைக்குக் கீழ் இறங்க விடாது தடுக்கின்றது. நிலக்கீழ் நீரூற்றுக்களைத் தடுக்கின்றது. இவற்றை எரியூட்டுவதனால் சுற்றாடலுக்கு ஒவ்வாத வாயுக்களை வெளியேற்றுகின்றன. இதனால் இவற்றை முற்றாகத் தடைசெய்ய வேண்டும்.

இப்பொலித்தீன் பாவனையைத் தடை செய்வதற்கு உரிய நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவு பரிமாறும் கடைகளில் இப்பொலித்தீன் பாவனையினால் அவற்றுள் காணப்படுகின்ற மிகுதி உணவுப் பதார்த்தங்கள் நீண்ட நாட்களுக்கு நீர்த்தன்மையுடன் காணப்படுவதால் இலையான்களின் பெருக்கமும் அதிகரிக்கின்றன. இதனால் நோய் பரவும் வாய்ப்பு அதிகரிக்கிறது. முக்கியமாகச் சாப்பாட்டுக் கடைகளில் வாழையிலைகளையே பயன்படுத்த வேண்டும். அது சுகாதாரத்திற்கு ஏற்றதோடு உடல் நலத்திற்கும் ஏற்றதாகும். எனவே இவற்றைப் பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும்.

**விவசாய நடவடிக்கைக்கு பாவிக்கப்படும் செயற்கை உரத்தினால் சூழல் மாசடைவது பற்றிய தங்களின் கருத்து?**

இப்பிரதேசம் ஒரு விவசாயப் பிரதேசமாக இருப்பதனால் இங்கு பெரும்பாலும் இரசாயன உரவகைகளே பயன்படுத்தப்படுகின்றன. இதனால் சூழல் மாசடைகின்றது.

இங்கு கிடைக்கின்ற கழிவுப் பொருட்களை பயன்படுத்தி அவற்றைக் கொண்டு பசளை தயாரித்து அவற்றின் மூலம் பெரும் விளைச்சலைப் பெற முடியும். மண் பரிசோதனை செய்துதான் உண்மையிலே உரப்பாவனை மேற்கொள்ளப்படவேண்டும். இங்கு அவ்வாறில்லை. தேவையற்ற மூலகங்கள் கூடப்பாவிப்பதனாலும் நிலம் உவரடைவதோடு சூழலுடன் பல நச்சுப் பதார்த்தங்களும் சேர்கின்றன. இவ்வாறு கிருமிநாசினிகளையும் உரவகைகளையும் பாவிப்பதைத் தவிர்த்து இயற்கை உரங்களைப் பாவித்து உயிரியல் முறையில் நோய்களைக் கட்டுப்படுத்தியும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் சூழல் மாசடைவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**செவ்வி கண்டவர்**
**சு.பாஸ்கரன்**

# அமைச்சர்களின் பொறுப்பை ஏற்கும்போது சனாதிபதி பிரதமருடன் ஆலோசிக்கவேண்டும்

## சட்ட வல்லுனர்கள் கருத்து

(கொழும்பு)

அமைச்சர்களின் பொறுப்புக்களை சனாதிபதியினால் பொறுப்பேற்கும் போது பிரதமரிடம் அது பற்றிக் கலந்தாலோசிப்பது அத்தியாவசியமானது என சட்டவல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சனாதிபதி அமைச்சர்களின் அமைச்சுப் பொறுப்புக்களைக் கையளிக்கும் பட்சத்தில் பிரதமரிடம் அது சம்பந்தமாக வினவவேண்டும். தற்போது சிறிலங்காவில் இரண்டு மாற்றுக் கட்சிகள் அதிகாரங்களைக் கொண்டுள்ளன. நிறைவேற்று அதிகாரமும், சட்டவாக்க அதிகாரமும் இவ்விரு கட்சியின் கையிலேயே உள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கலந்தாலோசிப்பதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்காது விட்டால் அரசியல் சர்ச்சைகள் தோன்றும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# வவுனியா நகர் குளத்தில் இனம்தெரியாத சடலம்

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா நகர் குளத்தில் இனந்தெரியாத சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கடந்த 31ஆம் திகதி இனம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் மேற் படி குளத்தில் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டு வவுனியா சுகாதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இச்சடலம் எவராலும் இனங்காணப்படாத நிலையில் பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொலத்தீன் பையில் அடைக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனை வவுனியா வைத்தியசாலை பொலிஸ் விசாரணை அதிகாரி எஸ்குகதாஸ் தெரிவித்துள்ளார். (ப.ர)

# நாளை புதிய சுற்றறிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியரின் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான புதிய சுற்றறிக்கையொன்று நாளை வெளிவரவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சிறிலங்காவின் பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன இதனைத் தெரிவித்தார். ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவு முரண்பாடுகளைக் குறைப்பது பற்றிய ஏக்கநாயக்க குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட வைபவத்தில் உரையாற்றிய போதே இதனைக் கூறினார்.

பழைய ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பான கொடுப்பனவு முரண்பாடுகளைக் குறைத்து அரசாங்க சேவையின் தற்போதைய சம்பள அளவிற்கு பொருத்தமான ஓய்வூதிய முறையொன்றை வகுப்பதே இந்தக் குழுவின் நோக்கம் என்று அதன் தலைவர் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச சேவை ஓய்வூதியம் பெறுவோருக்காக மாதாந்தம் 260 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட்டு வருகின்றது. ஏக்கநாயக்க குழுவின் அறிக்கை அமுல் செய்யப்படும் போது மேலும் 445 மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்க நேரிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# கல்வி எமது பேராயுதம், வாழ்வை வளமாக்கும் ஒப்பற்றகருவி அதனை நிலத்தைப் பாதுகாக்கப் பயன்படுத்துவது உடனடித்தேவை

## - தமிழ் மாணவர் ஒன்றியம் அறைகூவல்

(அலுவலக செய்தியாளர்)

**கல்வி எமது பேராயுதம் எமது வாழ்வை வளமாக்குவதற்கு ஒப்பற்ற கருவி அதை வைத்தே நிலத்தைப் பாதுகாப்பதும் செழுமைப்படுத்துவதும் எங்களது உடனடித் தேவையாகிறது. இத்தேவையை நிறைவேற்று வதற்காய் நாங்கள் போராடும் போது எதிர்வரும் எந்தத் தடைகளையும் தகர்த்து நிமிர்வோம் என்ற உணர்வெழுச்சியுடன் இந்நாளில் சபதமெடுத்துக் கொள்கிறோம் என தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்த அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

"நிலம் காக்கும் கல்விக்கு வித்திடுவோம்" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழீழத் தாயகம் எங்கும் மாணவர் குலம் எழுந்துநின்று எழுச்சி கொள்ளும் திருநாள்.

விடுதலைக்கான கல்வி வேண்டிக் காத்திருக்கும் மாணவர் சமுதாயம் இணைந்து இறுகிய கரங்களை உயர்த்தியபடி தெருவில் இறங்கி உரிமைக்குக்குரல் எழுப்பும் நாள்.

இந்த நிகழ்வு எமது நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுகின்ற நிகழ்வு. நீண்ட காலமாக தமிழீழ மாணவர்களாகிய நாம் நிறைவான கல்வி பற்றிச் சிந்திக்க வாய்ப்பின்றி இருந்து வருகிறோம்.

வெளிநாட்டு ஆக்கிரமிப்பும் அந்த ஆக்கிரமிப்பில் இருந்து இன்று வரை விடுபட முடியாத கல்வி முறையும், நீண்ட காலமாய் எமது சமூகத்தை அடிமை மனமுடையவர்களாக்கியுள்ளது.

தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால், இராணுவ அச்சுறுத்தல் ஒருபுறம், எமது சுயம் பற்றிய சிந்தனையைத் தடுத்தது. இதனால் அந்நிய மனோபாவத்துக்குள்ளும், ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்குள்ளும், மிக நீண்டகாலம் அடிபட்டுப்போயிற்று எமது கல்வி நிலை.

ஆனால் இன்னொரு புறம், இத்தகைய ஆக்கிரமிப்புக்குள்ளிருந்த தமிழ் மக்களை விடுவிப்பதற்காய் ஒரு புனிதப்போர் தொடங்கியது. சுயநிர்ணயம் பற்றிய ஆழமான மன உணர்ச்சி தமிழ் மக்களிடம் மேற்கிளம்பியது. குறிப்பாக இளைஞர்களிடம் பொங்குகின்ற உணர்ச்சியாக சுயநிர்ணயம் பற்றிய உணர்வு கிளர்கிறது.

இந்த உணர்ச்சிக்கிளர்வுகளின் தெளிவு நிலையில் நின்று கொண்டே எமது நிலத்தையும். அதனைப் பாதுகாக்கும் கல்வி நிலை பற்றியும், தமிழீழ மாணவர்களாகிய நாம் சிந்தித்து வருகிறோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்கள் முடிந்து விட்ட இந்த நேரத்திலும் கூட, எமது பாடசாலைகள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதும், எமது தெருக்களிலும், வயல்களிலும், ஏன்? வீட்டு முற்றங்களிலும் கூட, இராணுவம் தன் காக்கி உடையோடு ஆயுதம் தாங்கியபடி, திரிவதும் எமக்கு எரிச்சலையும், மனவேதனையையும் எமது சுயகௌரவத்திற்கு சவால் விடுவதாய் உள்ளது. எமது ஆத்திரத்தைக் கிளறுகிறது: இதை மீண்டும் மீண்டும் எம்மால் தாங்க முடியாது.

தமிழர் தயாகப் பகுதியில் பல பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பால் இயங்க முடியாத நிலையில் உள்ளது. ஒரு விதத்தில் இராணுவத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அல்லது இராணுவத்தால் சிதைக்கப்பட்டுள்ளது. அன்றேல் அயற் பிரதேசங்களில் இராணுவ நடமாட்டம், இருப்புக்கள் காரணமாக அன்றாடம் பயத்துடன் கூடிய நிலைமைக்கு மாணவ சமுதாயம் தள்ளப்பட்டுள்ளது.

நாங்கள் எங்கள் சொந்தச் சூழலில், எங்கள் சொந்தப்பள்ளிக்கூடங்களிலேயே படிக்க விரும்புகிறோம். அங்கு தான் எங்களால் நிம்மதியாக படிக்க முடியும்.

அன்பான சிறிலங்கா இராணுவ வீரர்களே! நாங்கள் எங்கள் சொந்தப் பள்ளிக்கூடங்களில் வந்து படிக்கவே ஆசைப்படுகிறோம். ஆகவே நீங்கள் அவற்றை விட்டு உங்கள் வீடுகளிற்கு போய் விடுங்கள். எங்கள் இடங்களை எங்களிற்கு தாருங்கள்.

எழுச்சி மிகுந்த, பொங்கும் மனதுள்ள துடிப்பான சமூகமாக வாழவே நாங்கள் விரும்புகிறோம்.

எமது இனத்தின் விடுதலைக்கான தேடலில், எமக்கும் மிகுந்த பங்குண்டு என்றே நாங்கள் நம்புகிறோம்.

எமது இந்த மன எழுச்சிகளை, உணர்ச்சிகளை, வெளிப்படுத்தும் எந்த ஒரு நிகழ்வையும் எவராவது தடை செய்வதை நாங்கள் வெறுக்கிறோம். இவற்றுக்காய் நாம் நடாத்தும் ஒன்று கூடல்களை, ஊர்வலங்களை, தடை செய்வதையோ அன்றி புலனாய்வு என்ற பெயரில் பயமுறுத்துவதையோ நாங்கள் விரும்ப மாட்டோம்.

எமது ஆசிரியர்கள், கல்வி நிர்வாகத்தினர், பெற்றோர்கள் கூட இந்த மன உணர்வுகளை மதிக்க வேண்டும் என்றே வேண்டிக் கொள்கிறோம்.

எமது சொந்த நிலங்களில், எமது கிராமங்களில், எமது சொந்தப் பாடசாலைகளை சிறிலங்கா இராணுவம் தொடர்ந்தும் ஆக்கிரமித்திருப்பதைக் கைவிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

கல்வி எமக்கு ஒரு பேராயுதம், எமது வாழ்வை வளமாக்குவதற்கான ஒப்பற்றகருவி. அதை வைத்தே எமது நிலத்தைப் பாதுகாப்பதும், செழுமைப்படுத்துவதும் எங்களது உடனடித் தேவையாகிறது.

இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காய் நாங்கள் போராடும் போது எதிர்வரும் எந்தத் தடைகளையும் தகர்த்து நிமிர்வோம் என்ற உணர்வெழுச்சியுடன் இந்நாளில் சபதமெடுத்துக் கொள்கிறோம்.

"எங்கள் கரங்கள் பலமானவை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

# தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்கள் மூன்று மாத காலத்துள் நிரப்பப்படும்

## - சிறில.கல்வி அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு மற்றும் தென் பகுதியில் உள்ள பாடசாலைகளில் நிலவும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்கள் யாவும் இன்னும் 03 மாதங்களினுள் நிரப்பப்படும் என கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தொடுத்த வினாவொன்றுக்குப் பதிலளித்த கல்வியமைச்சர், வடக்கு, கிழக்கு மற்றும் தென்னிலங்கையில் உள்ள தமிழ் மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான அமைச்சரவை அனுமதி ஒரு மாதத்திற்கு முன்னரே கிடைத்துவிட்டதாகவும் இன்னும் மூன்று மாதங்களினுள் இவ் வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்படும் எனவும் தெரிவித்தார்.

- ஓயாத அலைகள்-01 ஏழாம் ஆண்டு நிறைவு -

# மென் பந்துப் போட்டியில் சென்யூட்ஸ் அணிவெற்றி

(முல்லைத்தீவு)

ஓயாத அலைகள் 01 வெற்றிச் சமரின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தென்றல் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மென்பந்துப் போட்டியில் வண்ணாங்குளம் சென் யூட்ஸ் அணி வெற்றி பெற்றது.

கடந்த 02ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் முல்லை நகர புனரமைப்பு குழுச் செயலாளர் ச.சகீலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியினரும் வண்ணாங்குளம் சென் யூட்ஸ் அணியினரும் மோதிக் கொண்டதில் சென்யூட்ஸ் அணியினர் வெற்றியீட்டிக் கொண்டனர். (20)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி. பாலகிருஷ்ணன் யோகம்மா

பிறப்பு 1943-06-21 இறப்பு 2002-05-20

வேரில்லா மரமெனவே
தேய்ந்தே நிற்கிறோம்
ஊற்றுக்கண் விழிமூடவே
நாதியற்று தவிக்கிறோம்.
ஒளிதந்த விளக்கணைந்திடவே
இருளில் தவிக்கிறோம்.
உருவுக்கு உயிரிட்டவள் மறைந்திடவே
உருகியே விழிநீர் சிந்துகிறோம்
உறவுக்கு பாலமாயிருந்தவளே
மீண்டுமெம் மடிவந்து பிறந்திடாயோ
வழிமேல் விழிவைக்குமெமக்கு
விடையாக பிறப்பெடுப்பாயோ.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும்
ஆத்ம சாந்திக் கிரிகையிலும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்- மகள்,மகன்

(சீ.7895)


"வவுனியா வடக்கு புதூர் நாகதம்பிரான் தேவஸ்தானம்"



மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் மகா கும்பாபிஷேக ஆரம்பம் 05-06-2003 தொடங்கி எண்ணைக்காப்பு 10-06-2003 தொடங்கி 11ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 8.00 மணிக்கு புண்ணிய வாசனம், யாகபூசை, விஷேச ஹோமம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை வேத தோத்திர திராவிட தோத்திர பாராயணம், ஆசீர்வாதம், தூபி அபிஷேகம், பிரதான கும்பங்கள் வீதி, பிரதக்ஷணம், நாகதம்பிரான், பிள்ளையார் நாகபூசணி அம்மன், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கு மகா கும்ப அபிஷேகம், தசதர்சனம் எஜமானபிஷேகம், மகா அபிஷேகம், மஹாகவிர், நிவேதனம், விஷேச பூசை ஆச்சார்ய, சம்பாவனை, ஆசீர்வாதம், அடியார்களுக்கு அருட்பிரசாதம் வழங்கப்படும். மூலஸ்தான பூசை, வசந்தமண்டப பூசை, சுவாமி வீதி உலா.

பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார்
சிவாகம கிரியா திலகம், சிவாகம கிரியா பூசணம்,
பிரதிஸ்டாதிலகம், சிவாகம, கிரியாபானு, கிரியாகலாப மணி,
சிவஸ்ரீ. ராஜாராம் குருக்கள் அவர்களால்
நடத்தப்படும்.

அன்றையதினம் போக்குவரத்து ஒழுங்குகள்
ஆலயத்துக்கு செல்வதற்கு ஒழுங்குகள்
செய்யப்பட்டுள்ளன.

இ. பூலோகசிங்கம்,
செயலாளர்,
புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய,
பரிபாலனசபை புதூர்.

(சி-8146)

## சிந்தனைக்கு



மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு மற்றும் சூழ்நிலைகள் தான் ஒரு விடுதலைப் போராட்டத்தில் வெற்றிக்கு வழி வகுக்கின்றன.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 08-06-2003

## கதிர்காமரின் பூச்சாண்டி

"விடுதலைப்புலிகளிடம் இராணுவம், கடற்படை, நீதிமன்றம், பொலிஸ் நிர்வாகக் கட்டமைப்பு எல்லாம் உள்ள நிலையில் அவர்களுக்கு இடைக்கால நிர்வாக சபையைக் கொடுத்தால், அது தனியரசிற்கான அத்திவாரம் ஆகிவிடும், அது தற்கொலை செய்வதற்கு ஒப்பானதாகும்" எனச் சிறிலங்காவின் முன்னாள் வெளி விவகார அமைச்சரும் பொ.ஐ. முன்னணி உறுப்பினருமான லக்ஷ் மன் கதிர்காமர் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் வழங்குவதற்கு எதிரான தமது ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளார். அத்தோடு, புலிகள் தம்மிடம் உள்ள படையணிகளைச் சட்ட பூர்வ மானதாக்கிவிட்டால் சர்வதேச நாடுகளினால் கூட எதுவும் செய்ய முடியாது எனவும் எச்சரித்துள்ளார்.

திரு. லக்ஷ்மன் கதிர்காமருக்கு நன்றி விசுவாசம் தேவைதான். கறுப்புக் கோட்டைக் காவிக் கொண்டு நீதிமன்றப் படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தவருக்குப் பொ.ஐ. முன்னணி கொடுத்த வாழ்வு மிகப் பெரியது. டசின் கணக்கான ஆடம்பரக்கார்கள், பெரும் பங்களா வாசம், உலகத் தலைவர்களுடன் பேசிப்பறைந்து விருந்துண்டு கழிப்பதற்கான வாய்ப்பு மற்றும் வழங்கப்படும் மிக உயர் பாதுகாப்பு என்பன காரணமாக நன்றி விசுவாசமாக அவர் பேசத்தான் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிட்டால் அவர் ஒரு நன்றி கெட்டவராக, எஜமானர் விசுவாசமற்றவராகவே இருக்க முடியும்.

ஆனால், விசுவாசம், ஆதரவு என்பனவற்றை வெளிக்காட்ட வேண்டும் என்பதற்கான அர்த்தமற்ற வகையில் பேசுவதும், தவறான பாதையைக் காட்டுவதும் எஜமான்களுக்கு நன்றி விசுவாசமாக இருப்பதாகக் கொள்ள முடியாது. கதிர்காமர் தமது திறமையை, ஆற்றலை வெளிக்காட்டுவதாகவும் அமையமாட்டாது. தமிழ் மக்களுக்கு விரோதமாகவும் எஜமான்களைத் தவறான வழியில் நடத்திச் செல்வதாகவுமே இருக்க முடியும்.

தமிழர் தாயகப்பகுதியில், பெரும் பகுதியை விடுதலைப்புலிகளே தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். அதேபோன்று ஒரு அரசிற்கான நிர்வாகக் கட்டமைப்பையும் அவர்கள் கொண்டவர்களாகவே உள்ளனர். குறிப்பாக இராணுவம், கடற்படை மற்றும் காவல்துறை என்பனவற்றையும் நீதி மற்றும் வங்கி போன்ற நிர்வாகக் கட்டமைப்புக்களையும் உருவாக்கி வருகின்றனர். இவற்றின் சிறப்பான செயற்பாடுகள் குறித்து பல மட்டத்திலும் பாராட்டுக்கள் கிடைக்கப் பெற்றதும் உண்டு. ஆனால் இவ் அமைப்புக்கள் இன்னமும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறவில்லை.

ஆனால், தற்பொழுது விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கொடுத்தால் தமது நிர்வாகக் கட்டமைப்புக்களை சட்டபூர்வமானதாக்கிவிடுவார்கள். பின்னர் சர்வதேச நாடுகள் கூட எதுவும் செய்ய முடியாது போய்விடும் என்ற கதிர்காமரின் கூற்றுக்கள் இன்றைய சர்வதேச அரசியல் நடைமுறைகளை அவர் விளங்கிக் கொண்டிருக்கவில்லை என்பதன் வெளிப்பாடாகவே உள்ளது.

அதாவது இன்றைய சர்வதேச ஒழுங்கில் ஐ.நா. அங்கீகாரம் பெற்ற- ஐ.நா.வில் தமது தூதுவர்களைக் கொண்ட, தமது நாட்டின் தலைநகரில் உலக நாடுகளின் தூதரகங்களையும், சர்வதேச நாடுகள் பலவற்றில் தமது நாடுகளின் தூதரகங்களையும் கொண்ட நாடுகள் கூட தமது இறைமையைப் பாதுகாப்பதற்குப் பெரும் பிரயத்தனங்களையே செய்ய வேண்டியுள்ளது. சர்வதேச ரீதியில் வல்லாதிக்கத்தைச் செலுத்த முனையும் நாடுகள் ஏனைய நாடுகளின், இனங்களின் தலைவிதியை தமது வல்லாண்மையைக் கொண்டே நிர்ணயிக்க முற்பட்டு நிற்கின்றன.

ஆகையால், இடைக்கால நிர்வாகம் ஒன்று வழங்கப்பட்டால், விடுதலைப்புலிகள் தம்மைச் சட்டபூர்வமாக ஆக்கிக் கொள்வார்கள் என்ற பேச்செல்லாம் இடைக்கால நிர்வாகசபையைத் தோற்றுவிப்பதற்கு எதிரான கருத்துக்களே ஒழிய யதார்த்தத்திற்கு உட்பட்டவையான கருத்துக்கள் அல்ல. அத்தோடு, இக்கருத்தானது கடந்த கால அரசியல் வரலாற்றை ஒட்டிவந்ததொன்றாகவும் கொள்ளலாம்.

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக்கென எத்தகைய அதிகார அலகு ஒன்று குறித்துப் பேச்செழுந்தாலும் அது தனி அரசிற்கான/தமிழீழத்திற்கான அத்திவாரமாக அமைந்துவிடும் என சிங்கள அரசியல்வாதிகள் பேசுவது வழமையாகிவிட்டதொன்று. மாவட்ட அபிவிருத்திச் சபையில் இருந்து மாகாண சபை வரையிலும் இவ்வாறே பேசப்பட்டது. இந்த வகையிலேயே இடைக்கால நிர்வாகம் தனியரசிற்கான அத்திவாரமாக அமைந்துவிடும் என்ற பேச்சுமாகும். ஆனால், முன்னர் இவ்வாறாறெல்லாம் பேசுபவர்கள் தீவிர பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளாக இருந்தனர். இன்று பேசியுள்ளவர். தமிழராக அடையாளப்படுத்தக் கூடியவர் என்பது மட்டுமே வித்தியாசமானதாகும்.

ஆனால், அவ்வாறு எதுவும் நடந்து விடுவதற்கான வாய்ப்போ, சூழலோ இருக்கப் போவதில்லை. ஏனெனில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாகும் பட்சத்தில் அதற்கு உட்பட்டதாகச் சிறிலங்கா ஆயுதப்படைகள் இருப்பதற்கான வாய்ப்பு இருக்கப் போவதில்லை. அதேபோன்று இடைக்கால நிர்வாகம் ஒரு இராணுவத்தையோ அன்றி கடற்படையையோ கொண்டிருப்பதற்கான அதிகாரங்களையும்/அந்தஸ்தையும் கொண்டதாக இருக்கப் போவதில்லை.

ஆகையினால், கதிர்காமரது பேச்சானது அரசியல் யதார்த்தத்திற்கு மீறியதான - பூச்சாண்டி காட்டும் நடவடிக்கை போன்றதொன்றே. இது சமாதான முயற்சிகள் குறித்து பொ.ஐ. முன்னணி போடும் இரட்டைவேடத்தின் பிரதிபலிப்பாகும். இதற்குக் கதிர்காமர் போடும் தாளமே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் ஆகும். உண்மையில் இது பௌத்த-சிங்கள அடிப்படை வாதிகளை இடைக்கால நிர்வாகத்திற்கு எதிராக உசுப்பிவிடும் நடவடிக்கையாகும்.

# சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு மர நடுகை, சிரமதானங்கள், கருத்தரங்குகள்

உலக சூழல்தினத்தை முன்னிட்டு வன்னிப் பகுதியில் மரநடுகை, சிரமதானங்கள், கருத்தரங்குகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

கிராமம் கிராமமாக இந்நிகழ்வுகள் மக்களின் பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றன. கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை முன்னர் அமைந்திருந்த வளாகத்தில் சிரமதானப்பணி நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினரும் கிளிமாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரும் அதன் பங்காளி நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களும் இணைந்தே மேற்படி சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இப்பணியில் 75க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

வட்டக்கச்சிப் பகுதியில் உலக சூழல் தினத்தை முன்னிட்டு பல பகுதிகளில் சிரமதானப் பணியும், மர நடுகை நிகழ்வும் நடைபெற்றுள்ளது. வட்டக்கச்சி ம.வி மாணவர்கள் உட்பட் பல பாடசாலை மாணவர்கள் பொது அமைப்புக்கள் என்பன பல இடங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். வட்டக்கச்சி ம.வி மாணவர்கள் அரச வைத்தியசாலை உட்பட வீதி, விளையாட்டு மைதானம் போன்ற பல இடங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். வட்டக்கச்சி ம.வி.யில் மரநடுகை நிகழ்வும் நடைபெற்றது. 10 வீட்டுத் திட்டப் பகுதியிலும் விளையாட்டு மைதானம் அப்பகுதி மக்களால் சீர்செய்யப்பட்டது.

இதேவேளை பூநகரி மகாவித்தியாலத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் சூழல் பாதுகாப்புப் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. இதில கிளிமாவட்டத் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் சூழல் பாதுகாப்பு, தென்னை அபிவிருத்தி பற்றிய கருத்துக்களை வழங்கியுள்ளார். இதில் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும் பூநகரி நல்லூர் பகுதியில் பனைசார் பயிற்சி மாணவர்கள் பூநகரி பொருண்மிய மே.நி. ஏற்பாட்டில் சிரமதானப் பணியை மேற்கொண்டுள்ளனர். (12,லோ,29)

# ரத்வத்தவின் பிணைமனுவைப் பரிசீலிக்க சிறிலங்கா உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்தவின் பிணைமனுவைச் சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள் ளது. பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான உயர் நீதி மன்ற அமர்வில் இந்த மனு பரிசீலிக் கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இந்தப் பிணைமனுவை மீண்டும் பரிசீலனைக்கு எடுக்குமாறு மேல் நீதிமன்றத்துக்கு உத்தரவிடப்பட்டுள் ளது.

மூன்று உறுப்பினர்கள் கொண்ட மேல் நீதிமன்றம் காரணம் எதுவும் கூறாது ஒரு வசனக்கட்டளை மூலம் அனுருத்த ரத்வத்தவின் பிணை மனுவை முன்னர் நிராகரித்துவிட்டதாக ரத்வத்த தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தல் வன்முறையின் போது உடத்தலவின்னவில் முஸ்லிங்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக சந்தேக நபர்களாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல், ஜெனரல் அனுருத்தரத்வத்த உட்பட பலர் சிறையில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

-பாலியல் வல்லுறவின் பின் சிறுமி படுகொலை-

## நீதிபதியின் உத்தியோக பூர்வ வளாகத்தில் சிறுமியின் சடலம் மீட்பு

(கொழும்பு)

சிலாபத்தில் ஆறுவயதுச் சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சிறுமியின் சடலத்தை கடந்த வியாழனன்று சிறிலங்காப் பொலிசார் கண்டெடுத்தனர்.

சிலாபம் மாவட்ட நீதிபதியின் உத்தியோக பூர்வ வளாகத்தில் இருந்தே இச்சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

# முக்கிய அமைச்சுக்களை சனாதிபதி விரைவில் தன் பொறுப்பில் எடுப்பார்

- பொ. ஐ. பா.உ. அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

உள்துறை அமைச்சையும்,மக்கள் தொடர்பாடல் அமைச்சையும் சிறிலங்கா சனாதிபதி தனது பொறுப்பில் எடுத்துக் கொள்வார் என்று பொ.ஐ. முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அரசின் சட்டவிரோத நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தவே அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப்பேற்றுள்ளார் என்றும் வெகுவிரைவில் ஏனைய முக்கிய அமைச்சுக்களையும் சனாதிபதி தனது பொறுப்பில் கொண்டு வருவார் என்றும் அநுரா பண்டாரநாயக்கா விளக்கம் அளித்துள்ளார்.

## இலங்கையர் கொலை

(கொழும்பு)

ஜேர்மனியில் வசிக்கும் இலங்கையர் விடுமுறையைக் கழிப்பதற்காக நாடு திரும்பிய வேளையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு எரிபொருள் நிரப்பு வலயத்துக்கு முன்னால் கடந்த வியாழன் இரவு இக்கொலை இடம்பெற்றது.

- அரசு உதவிகளை வழங்கவில்லை -

## வவு.வில் மீளக் குடியேறிய சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வவுனியா கொக்குவெளி கிராமத்தில் மீள்குடியேறிய சிங்கள மக்கள் தமக்கு அரசு எதுவித உதவிகளையும் வழங்கவில்லையெனக் கூறி கடந்த வியாழக்கிழமை வவுனியாமாவட்ட அரச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதிக்கு வடக்கே அமைந்துள்ள கொக்குவெளிக் கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு அப்பகுதியில் இருந்து வெளியேறிய 300க்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிங்கள மக்களே தற்போது மீள்குடியேறி வருகின்றனர்.

இதுவரை கிராமத்தின் 106 குடும்பங்களைச் சேர்ந்த 600 சிங்கள மக்கள் மீள்குடியேறியுள்ளனர். இவர்கள் தமக்கு அரசு எதுவித உதவிகளையும் வழங்கவில்லை எனவும் கூறியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (10)

## பிரெஞ்சு பகிரங்க டெனிஸ்

## பெண்களுக்கான சம்பியன் பட்டத்தை ஜஸ்ரின் ஹெனின் வென்றார்

(பரிஸ்)

பிரெஞ்சு பகிரங்க ஓப்பன் டெனிஸ் பெண்களுக்கான சம்பியன் பட்டத்தை பெல்ஜியம் நாட்டவரான ஜஸ்ரின் ஹெனின் வென்றார்.

நேற்று பரிஸில் நடந்த இறுதிப் போட்டியில் சக நாட்டவரான கிம் கிளிஜ்ஸ்டஸை 6-0, 6-4 ஆகிய நேர் செட்டுகளில் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றார்.

ஜஸ்ரின் ஹெனின் இப்பகிரங்க டெனிஸ் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் உலக முதல் நிலை ஆட்டக்காரரான செரீனா வில்லியம்ஸைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.






புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபால.

# குடாநாட்டிற்கான மின்சாரத்தில் 54 வீதத்தை இராணுவம் சுரண்டுகிறது

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 54 சதவீதமான மின்சாரத்தினை சிறிலங்கா இராணுவத்தினர் சுரண்டி வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் பகுதிகளில் உள்ள இராணுவத்தினரின் அதிசக்தி வாய்ந்த மின்விளக்குகளுக்கும், கடற்கரைப் பகுதிகளில் இராணுவத்தினர் பொருத்தி உள்ள அதி சக்தி வாய்ந்த மின்சார விளக்குகளுக்கும் இந்த மின்சாரம் சுரண்டப்படுகின்றது.

ஆனால் இதற்குரிய கட்டணங்களும் மக்களால் பயன்படுத்தப்படும் மிகுதி 46 சதவீத மின்சாரக் கட்டணங்களுடனேயே அறவிடப்படுகின்றன.

இந்த விவகாரங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட படைத்துறையினருக்கும் அமைச்சர்களுக்கும் எடுத்துக் கூறியும் இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

# வவு. தச்சன்குளம் முகாம் படையினரால் விஸ்தரிப்பு

(வவுனியா)

வவுனியா தச்சன்குளத்தில் உள்ள சிறிலங்காப் படையினரின் முகாமின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

வவுனியா கண்டிவீதியில் உள்ள இந்தமுகாமினைச்சுற்றி மண்ணரண்கள் பலமாக அமைக்கப்பட்டு முட்கம்பி வேலிகள் போடப்பட்டு முகாம் விஸ்தரிப்புப் பணிகளும், பாதுகாப்பு பலப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களாக படையினர், இந்த முகாம் பலப்படுத்தல் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (28)

# திருமலையில் பொலிசார் சுற்றிவளைப்பு: சிலர் கைது செய்யப்பட்டு விசாரணை!

(திருமலை)

திருகோணமலையில் சிறிலங்காப் பொலிசார் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டு சிலரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்தை அண்டியதான கந்தசாமி கோவில் பகுதி உட்துறைமுக வீதியினுட் பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகள் நேற்று அதிகாலை 4.30 மணிதொடக்கம் பொலிசாரால் சுற்றிவளைக் கப்பட்டது.

மூன்றுமணிநேரமாக பொலிசார் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத்தேடுதலின் போது சிலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் தற்போது வாக்குமூலம் பெறப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். (25)

# திருகோணமலையில் இன்று உடற்பயிற்சிக் கண்காட்சி

(திருமலை)

மாகாண மட்ட உடற்பயிற்சி கண்காட்சி இன்று திருகோண மலையில் இடம்பெறுகின்றது.

இப்போட்டியில் முல்லைத்தீவு கிளிநொச்சி உட்பட வடக்கு கிழக்கு மாவட்ட பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். (25)

# வவுனியா மாவட்டத்தில் சுற்றாடல் ஆய்வரங்கு

வவுனியா மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான ஆய்வரங்கம் ஒன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள இவ்வாய்வரங்கிற்கு வவுனியா அரச அதிபர் தலைமை தாங்குகின்றார். இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட சுற்றாடல் தொடர்பாகவும், பாதுகாப்புத் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இவ் வாய் வரங் கிற் கு சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது சமுகம் தருமாறு வவுனியா நகர சபைச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (10)

# லக்பிம பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டு தீ வைத்து எரிப்பு

(கொழும்பு)

"லக்பிம" பத்திரிகை அலுவகம் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெலிக்கடை இராஜ கிரியவில் உள்ள இந்த அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன் தீவைத்தும் எரிக்கப்பட்டுள்ளது.

ஆறு பேர் அடங்கிய குழுவினரே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில சிரேஷ்ட உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டமை தொடர்பாக இந்தப் பத்திரிகை மீது குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இப்பத்திரிகை அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே தொடர்பாக பொய்யான தகவல்களை வெளியிட்டதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து இப்பத்திரிகையின் செய்தி ஆசிரியர் பிரிவில் பணியாற்றியவர்கள் இராஜினாமாச் செய்திருந்தனர்.

இதனால், கடந்த வாரம் இப்பத்திரிகை வெளியிடப்படவில்லை.

# வட, கிழக்கில் கடமையாற்றிய 69 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

வடக்கு கிழக்கில் குறிப்பிட்ட காலங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய 69 ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் இடமாற்றங்களால் வெளியேறிய ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கு கல்வியியற் கல்லூரிகளில் இருந்து பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்தார்.

# சமாதானம் நழுவிப்போக அரசு இடமளிக்கக் கூடாது!

## வட மாகாண அதிபர் சங்கம் கோரிக்கை

சமாதானம் கைநழுவிப் போவதற்கு சிறிலங்கா அரசு இடமளிக்கக் கூடாது என வட மாகாண அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் :

இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படை பரிமாணங்கள் இன்று எவருக்கும் ஒளிவு மறைவற்ற ஒன்றாகும். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக புரையோடிப் போயுள்ள இந்தப் பிரச்சினையானது வேண்டுமென்றே புறந்தள்ளி தோற்கடிக்கப்பட்ட நியாயமான பல சாத்வீகப் போராட்டங்களைக் கடந்து கடந்த இருபது ஆண்டு காலத்தில் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து அனைத்து இனமக்களுக்கும் அழிவினைத் தந்த ஒரு போராக மாறியது.

கடந்த காலங்களில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் மேற்கொண்ட தீர்க்கதரிசனமற்ற போட்டி அரசியல் நடவடிக்கைகளினால் தமிழ் பேசும் மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேரிட்டது.

இன்று பல கசப்பான அனுபவங்களின் பின்னர் காலங்கடந்தாயினும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்குமிடையே மேற்கொள்ளப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க புரிந்துணர்வு ஒப்பந்தமானது சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சை நல்கியது.

ஆயினும் அந்த ஒப்பந்தத்தின் பின்னர் அதில் ஒத்துக் கொள்ளப்பட்ட முனைப்பான விடயங்களை அமுலாக்குவதில் ஏற்படும் தடங்கல்களும், தாமதங்களும் சமாதானத்தின் பால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளைச் சிதறடிப்பதாகவே உள்ளன.

மக்களின் இயல்பு வாழ்க்கையினை மீண்டும் ஏற்படுத்துவதற்கு பொருத்தமான நிர்வாக மீள்கட்டமைப்பு ஒன்று அவசியமானது என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

இதற்குப் பொறுப்பானவர்களை பொறுப்பாக அமர்த்த வேண்டியது அரசின் பொறுப்பாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையில் வடக்குக் - கிழக்குப் பிரதேச புனருத் தாரண நடவடிக்கைகளை நடை முறைப்படுத்த வேண்டியது யதார்த்தமான ஒன்றாகும்.

இந்த விடயத்தில் ஏற்படும் இழுபறி நிலையானது ஏற்படப் போகும் சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடக் கூடாது. இரு தரப்பினரும் சமாதானத்துக்காக விட்டுக் கொடுக்க வேண்டிய ஏராளமான விடயங்கள் உள்ளன. போரின் தாக்கங்களினால் நொந்துபோயுள்ள தமிழ் மக்களின் மனிதாபிமான தேவைகள், உரிமைகள் மறுக்கப் படுமானால் அது மீண்டும் நாட்டில் அமைதியற்ற சூழ்நிலையையே ஏற்படுத்தும்.

எனவே இந்த விடயத்தில் பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமையில் ஏற்படுத்துவதே நீடித்த சமாதானத்துக்கு அடிப்படையாக அமையும்.

இதனை அரசாங்கமும் சமாதானத் தின் பால் அக்கறை உடைய அமைப்புகளும் ஏற்றுக்கொண்டு தாமத மின்றி அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என வட மாகாண அதிபர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதிவு செய்யவும்

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான கபடிப் போட்டி இம்மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளதால் இதுவரை பதிவு செய்து கொள்ளாத கழகங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ விளையாட்டுத் துறைச் செயலகத்தில் தமது கழகங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத் துறையினர் கேட்டுள்ளனர். (பா)

# அக்கரைப்பற்று வீதி அ.சபை நிர்மாணக் காரியாலயம் தீக்கிரை

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்மாணக் காரியாலயம் தீக்கிரையாகி உள்ளது.

காரியாலய களஞ்சியம் மற்றும் சகல முக்கிய பகுதிகள் முற்றாக எரிந்து சாம்பலாகி விட்டன.

இக்காரியாலய களஞ்சிய சாலையில் அக்கரைப்பற்று கல்முனை பகுதிகளுக்கான வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பாவிக்கும் அனைத்து உபகரணங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி வரைபடங்கள் முக்கிய கோவைகளும் எரிந்து சாம்பலாகி விட்டன.

அத்துடன் அக்கரைப்பற்று அம்பாறைப் பகுதி வீதி அபிவிருத்தி தேவைகளுக்கான அனைத்து பாவனை உபகரணங்கள், அலுவலக பாவனைப் பொருட்கள் அடங்கிய களஞ்சிய சாலையும் எரிந்து அழிந்துள்ளது.

சுமார் பத்து லட்சம் ரூபா இத்தீச் சம்பவத்தினால் அழிவுற்றுள்ளது.

# முல்லை தடகளப் போட்டியில் புதுக்குடியிருப்பு பி.செ.பிரிவு முதலிடம்

முல்லை மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டி கடந்த 4ஆம் 5ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் முதன்மை விருந்தினராக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினராக தமிழீழ நிர்வாக சேவை துணைப்பொறுப்பாளர் திரு. இளஞ்சேரனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்போட்டியில் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகள் பங்கு பற்றின. இதில் 207 புள்ளிகளைப் பெற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு முதலாம் இடத்தையும் 143 புள்ளிகளைப் பெற்று கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவு இரண்டாம் இடத்தையும் 95 புள்ளிகளைப் பெற்று துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு மூன்றாம் இடத்தையும் பெற்றன.

வெற்றி பெற்ற வீரர்களுக்கான பதக்கங்கள், பரிசில்களை முல்லை மாவட்ட அரசாங்க அதிபரும், தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளரும், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தனும் வழங்கிக் கௌரவித்தனர். (26)

## ஏ-9 ....

மந்த கதியிலேயே இடம்பெற்றுள்ளது.

இதனால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் வீதிப்புனரமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கையின்படி எதிர்வரும் டிசம்பர் மாதம் இப்பணிகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

தற்போது இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒன்பது அபிவிருத்திப் பணிகளை ஏழு ஒப்பந்தக்காரர்கள் மேற்கொண்டுள்ளனர் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

## மட்டு....

வும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த சிறுமி சிவநாயகம் லசினா (வயது 8) என்பவராவார்.

படையினரின் இடுப்பில் இருந்த இரண்டுகைக் குண்டுகளில் ஒன்று தவறிக் கீழே வீழ்ந்ததினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

சிறிலங்காப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பதவி....

பல்வேறு வழிகளில் பிரிப்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் டிஸ்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகளை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக ஏற்றவார்த்தைகளைப் பயன்படுத்தி முழுவடக்கு கிழக்கையும் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்க முயல்கின்றார் எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஞ்சித் கொலைச் சந்தேக நபர்களுக்கு 30 கொலைகளுடன் தொடர்பு

## பொலிசார் தெரிவிப்பு

தென் மாகாண சபை அமைச்சர் எம்.கே. ரஞ்சித் (சண்டிமல்லி) கொலை தொடர்பான நான்கு முக்கிய சந்தேக நபர்களைத் தாம் கைது செய்துள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவிக்கின்றனர். எதிர்க்கட்சியினர் ரஞ்சித்தின் கொலை ஒரு அரசியல் படுகொலை எனத் தெரிவிக்கின்ற போதும் பொலிசார் கைது செய்யப்பட்டோர் தென் மாகாணத்தில் பிரசித்தி பெற்ற பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் ரஞ்சித்துடன் நீண்டகாலப் பகைமை கொண்டவர்கள் என்றும் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களான சுனில் ரணவீர, பலத்தர ஜகத், ராகுல, விஜயலால் ஆகியோர் நீதி மன்ற உத்தரவின் பிரகாரம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மற்றொருவரை இரண்டு பொலிஸ் குழு தேடிவருகின்றது.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் கொழும்பில் சனாதிபதி மாளிகையிலிருந்து சிறிது தூரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டோர் தென் பகுதியில் ஏற்கனவே நடைபெற்ற 30க்கும் மேற்பட்ட கொலைகளுடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி அலுவலகம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.